**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, ஓசூர்.**

**நாள்:22.10.2018.சி.சி.55/2018 அ.சா.9 திரு. மஞ்சுநாத்**

**மு.வி.**

நான் தற்போது கர்நாடகா மாநிலம் கைவாரம் யோகி நாராயணா மடத்தில் திருமணத்தை புக் செய்து பதிவு செய்யும் பணியை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் சான்றிதழ் எங்கள் மடத்தில் கொடுக்கப்பட்டது தான். கடந்த 22.5.2017ம் தேதி வெங்கட்ராஜ், வெங்கட்ராஜின் பெற்றோர் எங்கள்மடத்திற்கு வந்து இருவருக்கும் திருமணம் செய்ய வேண்டும் என்றும் அதற்கான விண்ணப்பத்தை புகைப்படம் ஒட்டி முகவரி சான்றிதமுடன் இருவரும் கையொப்பம் செய்து கொடுத்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் 1,2 எதிரிகளுக்கு திருமணம் செய்ய 3 முதல் 6 வரையிலான எதிரிகள் எங்கள் மடத்திற்கு வந்து கேட்ட போது நான் 1வதுதிருமணமா அல்லது 2வது திருமணமா என்று கேட்ட போது அவர்கள் 1வதுதிருமணம் என்று சொன்ன போது அன்று காலை சுமார் 5 மணிக்கு வெங்கட்ராஜூலு, தபெ. கிருஷ்ணப்பா, சின்ன எலசகிரி,சிப்காட், ஒசூர் தாலுக்,என்பவருக்கும் ஒசூர் நல்லூரை சேர்ந்த தேவராஜ் மகள் வினுதா என்பவருக்கும் எங்கள் மடத்தில் திருமணம் நடந்தது. அப்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் மற்ற எதிரிகள் திருமணத்தில் கலந்து கொண்டார்கள்.11.11.2017ம் தேதி ஒசூர் போலிசார் மேற்படி திருமணத்தை பற்றி எங்கள் மடத்திற்கு வந்து விசாரித்து அதன் ஆவணங்களை கேட்ட போது திருமணம் நடந்ததற்கான பரி யோகி நாராயணா மடத்தில் 1,2 எதிரிகள் தாக்கல் செய்த விண்ணப்ப நகல் மற்றும் திருமணம் நடந்தது என்பதற்கான கடிதத்தை போலிசாரிடம் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் விண்ணப்பம் 1,2 எதிரிகளின் திருமணத்திற்காக கொடுத்த விண்ணப்பம் தான். **அது அ.சா.ஆ.3 ஆகும், திருமணம் நடந்ததற்காக எங்கள் மடத்தின் லெட்டர் பேடில்கொடுத்த கடிதம் அ.சா.ஆ.4 ஆகும். திருமணத்தின் போது எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கப்படும் மேரேஜ் ரிஜிஸ்டரில் Class 3rd Marriage -1-5-2017 Ledger No.40ல் திருமணம் செய்து கொண்ட 1,2 எதிரிகள் மற்றும் 1ம் எதிரியின் தந்தை கிருஷ்ணப்பா கையொப்பம் செய்தார். 2ம் எதிரியின் தந்தை தேவராஜ் கைரேகை செய்தார். அது பக்கம் எண்.66,67, பக்கத்தின் ரசீது எண்.22525/225/17 என பதிவாகியுள்ளது. புத்தக எண்.அதன் உண்மை நகலை**

**தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துகிறேன். அது அ.சா.ஆ.5 ஆகும்.**

1,2 எதிரிகள் இந்து முறைப்படி மாலை மாற்றி கொண்டு தாலி கட்டி புரோகிதர் வேதம் ஓத மற்றும் அக்னியை 7 முறை வலம் வந்து திருமணம் நடந்தது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**சாட்சி தனக்கு தெலுங்கு மட்டும் தெரியும் என்று சொன்னதால் வழக்கறிஞர் திரு.ஏ.சத்திய நாராயணா அவர்கள் சாட்சி தெலுங்கில் சொன்ன வாக்குமூலத்தை நீதிமன்றத்திற்கு தமிழில் மொழி பெயர்த்து சொன்னார். அதை எதிரிகள் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டது.**

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எனவே சாட்சி குறுக்கு விசாரணைசெய்யப்படவில்லை. எதிரிகளின் முன்னிலையில் சாட்சியின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**ஒம்/-எஸ். சாந்தி.**

**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2,**

**ஒசூர்.**